**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வந்தவாசி, திருவண்ணாமலை மாவட்டம்**

முன்னிலை - திருமதி. செ. மகாலட்சுமி, பி.ஏ., எம்.எல்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, வந்தவாசி

(திருவள்ளுவர் ஆண்டு 2057, பிரபாபவ வருடம், சித்திரை மாதம் 07ஆம் நாள்)

2026ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 20-ம் நாள் திங்கள் கிழமை

**அசல் வழக்கு எண். 56/2022**

**CNR.No.TNTM16-000069-2022**

அய்யாசாமி பிள்ளை .... வாதி

/எதிர் /

கன்னியப்பன் .... பிரதிவாதி

இவ்வழக்கு 20.04.2026 அன்று என் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்தபோது வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.ஜே. நேதாஜி மற்றும் திரு.எஸ். கார்த்திகேயன் அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. இரா. மணி அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதி தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததால் பிரதிவாதியை அழைத்தும் நீதிமன்றத்தில் ஆஜராகாததால் தோன்றாத் தரப்பினராக கருதப்பட்டு, வாதியின் வாதுரையை கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பித்திடும்,

**தீர்ப்புரை**

இவ்வழக்கு வாதிக்கு பிரதிவாதி செலுத்தவேண்டிய தொகை ரூ.31,975/-ம் பின்வட்டியும் வாதியின் கோர்ட்டு செலவுத் தொகையையும் சேர்த்து வாதிக்கு பிரதிவாதி பர்சனலாகவும் குடும்ப சொத்துக்களாலும் செலுத்த வேண்டும் என்று உத்திரவிடக்கோரி வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள திருத்தல் வழக்குரையின் சுருக்கம் : -**

**2.1**). வாதி தெரிவித்துக்கொள்வது யாதெனில், பிரதிவாதி வாதியிடம் கடனாக ரொக்கமாக ரூ.25,000/- (ரூபாய் இருபத்து ஐந்தாயிரம் மட்டும்) பெற்றுக்கொண்டு

மாதம் ஒன்றுக்கு ரூ.100/-க்கு வட்டி ரூ1/- வீதம் கூடிய வட்டியையும் அசலையும் சேர்த்து வாதிக்காவது, வாதியின் உத்தரவு பெற்றவர்களுக்காகவது வேண்டும்போது திருப்பிச் செலுத்துவதாக ஒப்புக் கொண்டு தாவா புரோநோட்டை 01.05.2019 தேதியில் புரோநோட்டு எழுதிக் கொடுத்தார் என்றும், மேற்படி புரோநோட்டுக்காக 08.05.2019 அன்று ரூ.2000/-வட்டியாக செலுத்தி செல்லு வைத்துள்ளார் என்றும், வேறு எந்த தொகையும் செலுத்தி வரவோ, செல்லோ வைக்கவில்லை என்றும், பிரதிவாதி வியாபாரம் செய்து வசதியான வாழ்க்கை வாழ்ந்து வருகின்றார் என்றும், எனவே பிரதிவாதி தமிழ்நாடு அரசு கடன் நிவாரணச் சட்டத்தின் கீழ் பலனை அடைய அருகதையற்றவர் என்றும், பிரதிவாதியை வாதி நேரில் சந்தித்து தாவா பாண்டு கடனை பைசல் செய்யுமாறு பலமுறை கேட்டும் பைசல் செய்யாததால் 21.04.2022 அன்று வழக்கறிஞர் மூலம் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றும், மேற்படி அறிவிப்பு அனுப்பியும் பிரதிவாதி தாவா பாண்டு கடனை பைசல் செய்யவோ, பதில் அறிவிப்போ அனுப்பவில்லை என்றும், வாதிக்கு பிரதிவாதி எழுதிக்கொடுத்த தாவா பாண்டில் 12% வட்டி செலுத்துவதாக ஒப்புக் கொண்டு இதுவரை அசலோ அல்லது வட்டியோ செலுத்தாததால் தாவா பாண்டு தொகையை கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

3. பிரதிவாதி தரப்பில் எதிர் வழக்குரை தாக்கல் செய்யாததாலும், பிரதிவாதியை அழைத்து வருகையின்மையால் தோன்றாத் தரப்பினராக கருதப்பட்டு அவருக்கு எதிராக ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

4. **வாதி கோரிய பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா? என்பதே தீர்மானம் செய்ய வேண்டியுள்ளது.**

**5.** வாதி தரப்பில் வாதி **வா.சா.1** ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார். வா.சா.1-ன் மூலம் 01.05.2019ம் தேதியிட்ட புரோநோட்டு அசல் **வா.த.சா.ஆ.1** ஆகவும், 21.04.2022 தேதியிட்டு பிரதிவாதிக்கு வாதி அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் **வா.த.சா.ஆ.2** ஆகவும், குறியீடு செய்யப்பட்டுள்ளது.

பிரதிவாதி தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. வாதி தரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

6. வாதி தரப்பில் வா.சா.1-ன் மூலமாக வா.த.சா.ஆ.1 மற்றும் வா.த.சா.ஆ.2 குறியீடு செய்யப்பட்டுள்ளன. வாதி வழக்குரையில் கூறிய அதே விவரங்களை தனது முதல் விசாரணையில் சாட்சியமளித்துள்ளார். மேற்படி வா.சா.1ன் சாட்சியத்தின் மூலம் பிரதிவாதி வாதியிடம் கடன் தொகை ரூ25,000/-பெற்றார் என்பதும், அதற்கு ரூ.2000/- செலுத்தி செல்லு வைத்தார் என்பதும் தெரிய வருகிறது. மேலும் பிரதிவாதி வியாபாரம் செய்து வசதியான வாழ்க்கை வாழ்ந்து வருவதாகவும், பிரதிவாதிக்கு கடன் நிவாரண சட்டங்களும் பொருந்தாது என்றும், பாண்டு பாக்கியை பைசல் செய்யும்படி பலதரம் கேட்டும் வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்தும் பைசல் செய்யவில்லை என்பதும் தெரிய வருகிறது. மேலும், பிரதிவாதி எதிர்வழக்குரை தாக்கல் செய்யாத காரணத்தினால் தோன்றாத் தரப்பினராக தீர்மானம் செய்யப்பட்டுள்ளார். வா.த.சா.ஆ.1 மற்றும் வா.த.சா.ஆ.2 ஆவணங்களிலிருந்தும், பிரதிவாதி வாதியிடம் பெற்ற கடன் தொகை ரூ.25,000/-மும் பின்வட்டியும் சேர்த்து ரூ.31,975/-ஐ செலுத்தாமல் இருந்துள்ளார் என்று தெரிய வருகிறது. மேலும் வாதி தரப்பில் தாவாவானது குறிப்பிட்ட கால வரம்பிற்குள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் 1963ஆம் ஆண்டின் காலவரையறை சட்டம் உறுப்பு 35-ன் படி குறைபாட்டிற்கு உள்ளாகவில்லை. வா.சா.1ன் சாட்சியங்களின் மூலமும் வா.த.சா.ஆ.1 மற்றும் வா.த.சா.ஆ.2 வரையான ஆவணங்களிலிருந்தும் பிரதிவாதி வாதியிடம் பெற்ற கடன் தொகை ரூ.25,000/-த்துக்கு வட்டியும் அசலும் சேர்ந்து ரூ.31,975/-ம் பாக்கி தொகையை வாதிக்கு பிரதிவாதி செலுத்தாமல் இருந்துள்ளார் என்பது வாதி தரப்பில் நிரூபணம் செய்யப்பட்டிருப்பதால், பிரதிவாதி தாவா தொகையினை பின்வட்டியுடன் வாதிக்கு திரும்ப செலுத்த கடமைபட்டவர் என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்து அவ்வாறே தீர்வு காண்கிறது.

**7. இறுதியாக,**

**1. அசல் வழக்கு செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது.**

**2. வாதிக்கு தாவா தொகையான ரூ.31,975/- (ரூபாய் முப்பத்து ஒன்றாயிரத்து தொள்ளாயிரத்து எழுபந்தைந்து மட்டும்) மற்றும் தாவா தாக்கல் செய்த தேதி முதல் தீர்ப்பு தேதி வரை அசல் தொகையான ரூ.25,000/-க்கு ஆண்டிற்கு 9% வட்டியுடனும், தீர்ப்புக்கு மறுநாள் முதல் தொகை முழுவதும் வசூலாகும் தேதி வரை அசல் தொகையான ரூ.25,000/-க்கு ஆண்டிற்கு 6% வட்டியுடன் பிரதிவாதியிடமிருந்து கிடைக்கத்தக்கது என பிரிவு 34 உரிமையியல் விசாரணை முறைச் சட்டத்தின் கீழ் தீர்ப்பளிக்கப்படுகின்றது.**

இந்த தீர்ப்புரை என்னால் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, இன்று 2026ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 20-ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

MAHALAKSHMI C

Digitally signed by MAHALAKSHMI C
Date: 2026.04.20 16:40:55 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வந்தவாசி.

**வாதி தரப்பு சாட்சிகள்**

1. வா.சா.1. திரு. அய்யாசாமி பிள்ளை (வாதி)

**வாதி தரப்பு சான்றாவணங்கள் -**

| வ. எண். | சான்றாவணங்களின் எண்ணிக்கை | தேதி | விவரம் | ஷரா |
|---|---|---|---|---|
| 1. | வா.த.சா.ஆ.1. | 01.05.2019 | தேதியிட்ட புரோநோட்டு | அசல் |
| 2. | வா.த.சா.ஆ.2 | 21.04.2022 | தேதியிட்டு வாதி பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு | அலுவலக நகல். |

**<u>பிரதிவாதி தரப்பு சாட்சிகள்</u>** - **இல்லை**

**<u>பிரதிவாதி தரப்பு சான்றாவணங்கள்</u>** - **இல்லை**

MAHALAKSHMI C

Digitally signed by MAHALAKSHMI C
Date: 2026.04.20 16:41:18 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

வந்தவாசி.